BOOMI INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
An international open access, peer- reviewed, refereed journal

# வலுப்பூரம்மன் வழிபாடு

# Valuppuramman Worship

**த.திவ்யா**
முனைவர் பட்ட ஆய்வாளர்(பதிவு எண்: 20PHTMP002), தமிழ்த்துறை,
அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம், கோயம்புத்தூர், தமிழ்நாடு, இந்தியா.
**முனைவர் த. நாகம்மாள்**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம், கோயம்புத்தூர்,

**D.Divya**
Research Scholar of Tamil, Reg.No: 20PHTMP002, Avinashilingam Institute for Home Science and Higher Education for Women, Coimbatore, Tamil Nadu, India. ORCiD: https://orcid.org/0000-0002-2648-6710
**Dr.T.Nagammal**
Assistant Professor of Tamil, Avinashilingam Institute for Home Science and Higher Education for Women, Coimbatore, Tamil Nadu, India. ORCiD: https://orcid.org/0009-0001-5677-2267

**Abstract**

This study focuses on the special features of the worship of Valuppuramman, located in Vanavanseri village in Palladam taluk of Tiruppur district. Since this is a complete field study, interviews were conducted regarding the methods and significance of worship. Information was collected about the structure of the temple, its unique features, the significance of the goddess, and the methods of vows and remedies performed at the shrine. Through the history of Valuppuramman, this study also examines how the worship practices and traditions have developed over time.

As worship practices are closely connected with the beliefs of the people, information was also gathered from the residents of the villages surrounding Vanavanseri and compiled into this article. Historical records such as inscriptions, copper plate grants, and temple-related documents have also been included. In addition, this article discusses traditional worship practices such as sacrificial offerings, fulfillment of vows, and ritual observances followed by the devotees.

**Keywords:** Worship, Special Features of the Village, History, Beliefs.

**ஆய்வுச்சுருக்கம்**

திருப்பூர் மாவட்டத்தில் பல்லடம் வட்டாரத்திலுள்ள வானவன் சேரி என்னும் ஊரில் அமைந்துள்ள வலுப்பூரம்மன் வழிபாட்டு சிறப்புகளை கூறுவதாக இவ்வாய்வு அமைந்துள்ளது. இது ஒரு முழுமையான களஆய்வு என்பதால் வழிபாட்டின் முறைகளையும் சிறப்புகளையும் நேர்காணல் செய்து கோயிலின் அமைப்பு மற்றும் பிற சிறப்பு தகவல்கள், அம்மனின் சிறப்பு, வேண்டுதல் மற்றும் பரிகாரம் செய்யப்படும் முறை ஆகிய தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. வலுப்பூரம்மன் வரலாற்று மூலம் வழிபாடுகள் எவ்வாறு இவ்வூராரிடம் வளர்ச்சி அமைந்துள்ளது என்பதை இவ்வாய்வில் காணலாம். வழிபாடுகள் மக்களின் நம்பிக்கையை சோர்ந்தவையாக உள்ளதால் வானவன் சேரியை சுற்றியுள்ள ஊர் மக்களிடமும் தகவல்கள் சேகரிக்கப்பட்டு கட்டுரையாக தொகுக்கப்பட்டுள்ளது. கல்வெட்டுகள், செப்புப் பட்டயம், பூத சதுக்கம் போன்ற வரலாற்று செய்திகளும், பூசைமுறை, பலியிடுதல், நேர்த்திக்கடன் செலுத்துதல் போன்ற வழிபாட்டு முறைகளையும் இக்கட்டுரையில் காணலாம்.

**குறிச்சொற்கள்:** வழிபாடு, ஊர் சிறப்பு, வரலாறு, நம்பிக்கைகள்

## முன்னுரை

கொங்கு நாட்டின் 24 நாடுகளில் ஒன்று பொங்கலூர் நாடாகும். பொங்கலூரில் புகழ்பெற்ற வானவன் சேரி என்றழைக்கப்படும் நாடு உள்ளது. இவ்வலுப்பூர் நாட்டில் மக்களை காக்கும் வஞ்சியம்மன் மக்களின் நோய்களையும், வறுமையையும் தீர்க்கும் தெய்வமாக விளங்கிற்று. தற்போது திருப்பூர் மாவட்டத்தின் பல்லடம் வட்டத்திலிருந்து கோவில்வழி என்னும் ஊருக்கு அருகில் இரண்டு கிலோமீட்டர் தொலைவில் ஒரு வலுப்பூர் நாடு என்றழைக்கப்படும் ஊரானது அமைந்துள்ளது.

**பொங்கலூர் பெயர்காரணம்**

பொன்னிறத்தாள் ஆன கல்மணிகள் அதிகம் கிடைக்கக்கூடிய பகுதி என்பதால் பொன்- கல்லூர் - பொங்கலூர் என்ற பெயரும், பொங்காமலே பொங்கிய பொங்கலூர் அம்மன் நெருப்பில்லாமல் பொங்கிய நீலகண்டியம்மன் என்ற பெயருக்கு ஏற்ப மழையினால் அடுப்பில் நெருப்பு அணைந்து போதும் பொங்கல் பொங்கிய காரணத்தால் பொங்கலூர் என்ற பெயர் பெற்றதாக பல காரணங்களை கூறுகின்றனர்.

வானவன் சேரி - வானளாவிய உயர்ந்த மக்கள் சேர்ந்து வாழ்வதால் இவ்வூரார் வானவன் சேரி என்றழைக்கப்படுகிறது. மக்கள் ஒன்று சேர்ந்த வாழ்வதற்கு ஊர் காவல் தெய்வமான வலுப்பூரம்மன் என்னும் வஞ்சியம்மன் ஊர் பொது தெய்வமாக விளங்குகிறது.

- வலுப்பூரம்மன் செப்பேடு பட்டயமும், வஞ்சியம்மன் ஒரு சமுதாயம் வரலாற்று செய்திகளை அறிந்கு கொள்வதற்கு தொல்பொருள்கள், செப்பேடு, கல்வெட்டு, ஓலைச்சுவடி, நாணயம், இலக்கியங்கள், அயல்நாட்டார் குறிப்புகள் ஆகியவை அடிப்படை மூலங்களாக அமைந்துள்ளது.
- வலுப்பூரம்மன் பற்றிய செய்திகளை அறிந்கு கொள்வதற்கு கி.பி ஐந்தாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட வலுப்பூரம்மன் கோவில் செப்பேடு முக்கிய ஆவணமாகும். இதே செப்பேட்டில் வலுப்பூரம்மன் கோவில் வரலாறு மட்டுமின்றி குலாலர் இனத்தாருக்கு பட்டா கொடுத்தது, மீராத்துலக்கன் இரு இனத்தாரை சிறைப்பிடித்துக் கொண்டு போய் மீண்டும் இவர்களை விடுவித்தது போன்ற வரலாற்றுச் செய்திகள் இடம் பெற்றதால் குலாலர் வரலாற்றில் இது ஒரு முக்கிய ஆவணமாக விளங்குகிறது எனலாம்.
- விக்ரமசோழனின் மகளாகி குழலி தீராத வலிப்பு நோயினால் அவதியுற்றாள். மருத்துவம் மற்றும் வைத்தியரிடம் கொண்டு சென்ற மன்னன் தன் மகளுக்கு நோய் குணமாகவில்லை என வேதமனயுற்றிருந்தான். ஒருநாள் மன்னனின் கனவில் வந்த பத்ரகாளியம்மன் உன் மகளின் நோய் தீர்க்கின்ற அவன் கற்றாங்காணியில் இருக்கிறான். அந்த வேட்கோவனால் வியாதி தீரும்.
- ஊத்தலூர் வஞ்சியம்மன் கோவிலை பூஜை செய்து வருகிறார் என்று கூறி விட்டு செனறும் உடனே மன்னனிடம் சென்று தன் மகளைத் தூக்கிக்கொண்டு இளவரசியின் அருகே ஒரு திரை இட்டு அதற்கு ஏற்ப மணலை பரப்பி வைத்து பூஜை செய்ததும் அத்திரை எரிந்து சாம்பலாக மாறியது. அப்பொழுதே வலிப்புநோய் இளவரசியை விட்டு நீங்கியது. ஏரிந்த சாம்பலினை விபூதியாக இளவரசியிடம் வேட்கோவன் கொடுத்தார். (தூரன், வேலுசாமி, வயது 70 காளவேலம்பட்டி, திருப்பூர்)

தன் மகளின் நோயிமன தீர்த்து வைத்ததால் வானவன் சேரிக்கு வலுப்பூர் என பெயரிட்டு வஞ்சியம்மனை வலுப்பூர் அம்மன் என பெயர் மாற்றினார். நோய் தீர்த்த வேட்கோவனுக்கு நஞ்சையில் ஆறு கிராமமும் புஞ்சையில் ஆறு கிராமமும் பரிசாக கொடுத்து அக்கிராமத்திற்கு வலுப்பூர் நாடு என பெயரிட்டார்.

நல்லூர், திருப்பூர், முகுந்தை, கட்டாங்கண்ணி, அமுக்கயம், மண்ணரை என்று தற்பொது அழைக்கப்படும் ஆறு ஊர்களும் மன்னன் பரிசாகக் கொடுத்த கிராமங்கள் ஆகும். இது போன்ற வரலாற்றுச் தெய்திகள் வலுப்பூரம்மன் செப்புப் பட்டயத்தில் குறிக்கப்பட்டுள்ளது என்பது கள ஆய்வின் மூலம் அறிய முடிகிறது.

**வரலாற்றுச் சின்னங்களும், கோயில்கல்வெட்டுகளும்**

ஓலைச்சுவடிகள், தொல் பொருள் என அனத்தும் வரலாற்றுச் செய்திகளைக் கூறுவது போல கல்வெட்டுகளும் வரலாற்று செய்திகள் தருவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. வலுப்பூரம்மன் கோவிலில் மூன்று கல்வெட்டுகள் உள்ளது. கல்வெட்டுக்களில் வரலாற்றுச் தெய்திகளுக்கு மட்டுமின்றி உபயம் குறித்த தகவல்களையும் குறிக்கிறது. கோயிலின் மதில் சுவரில் வடக்கு முகமாக உள்ள கல்வெட்டில் குப்புசாமி கவுண்டர், பாரியாள் (குப்புசாமி கவுண்டர மனைவி) சின்னம்மா கவுண்டச்சி கோயிலுக்கு திருமதில் கட்டிக் கொடுத்த உபயத்தைக் குறிப்பிடுகிறது. இக்கல்வெட்டில் மனைவி என்பவளை பாரியாள் எனவும் குறிப்பிடலாம் என்ற திருப்பூர் மாவட்ட வட்டார வழக்கினை அறியமுடிகிறது.

**கல்வெட்டு-2** கோயிலின் நுழையுமிடத்தில் மேற்கு புறத்தில் சுவசராரமாக வடக்குமுகமாக நடப்பட்டுள்ளது.

**கல்வெட்டு-3** கோயிலில் ஓர் அம்மி உள்ளது. இதன் நீள் கீழ்ப்பட்டையில் இரண்டு வரி கல்வெட்டு உள்ளது. அம்மியை கோயிலுக்கு தானம் கொடுத்தவர் பற்றிய செய்தி குறிப்புகள் கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ளது.

**தேர்- தேர்த்திருவிழா**

இத்தேரானது முந்தைய காலம் தொட்டே கைலாசநாதர் கோயிலின் முன் நிறுத்தப்பட்டுள்ளது. இது பழைய மரத்தேர் சேதமடைந்து ஓடாத நிலையில் இருப்பதால் புதிய தேர் பல லட்சம் ரூபாய் செலவில் செய்யப்பட்டுள்ளது.

**தேரோட்டம்**

கார்த்திகை மாதத்தில் ஒரு நல்ல நாளில் தேருக்கு பூஜைகள் செய்து தைப்பூசத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்பே பழுகுபார்த்து தயாராக வைக்கப்படும்.

- தேரோட்டத்திற்கு முன்பு கிராம சாந்தி என்னும் மூத்த பிள்ளையார் வழிபாடு அதாவது சூலக்கல்லுக்கு மாலையிட்டு சந்தனம் இட்டு பூஜை செய்து பின்பு தேரோடும் வீதிக்கு கொண்டு வருவது வழக்கமாகும். தேர் வீதிக்கு வந்த மறுநாள் காலையில் புண்ணியத்தை செய்கு கலசப் பூஜை செய்து முளைப்பாரி போட்டு அம்மனுக்கு காப்பு கட்டி அபிசேக அலங்காரங்கள் செய்து தீபாராதனைகள் முடிந்தபின் சிம்ம கொடி தேரில் ஏற்றிவலம் வருவார்கள்.
- பின் மறுநாள் 12 மணியளவில் மூலவர் உற்சவருக்கு அபிசேக அலங்காரம் செய்கு உற்சவரை தேரில் எழுந்தருள செய்கு விழா நடத்தவார்கள். அம்மன் கோயிலில் ஒட்டி சரியான பாதை இல்லாத காரணத்தால் கையிலாசநாதர் கோயிலில் தேர் நிறுத்தப்பட்டுள்ளது. வலுப்பூரம்மன் கோயிலில் திருவிழா காலங்களில் தேரோட்டம் நடத்தி வழிபாடு செய்யப்படுவது இன்றுவரை பின்பற்றப்படும் வழக்கமாகும்.
- பூதசது க்கம் மனிதன் தன் சக்திக்கும் அப்பாற்பட்ட இயற்கையினை கண்டு அச்சம் கொண்டிருந்தான் அது தன்னை அழித்து விடும் என்று கருதி இயற்கையினை வணங்கினான். இயற்கை சக்திகளான நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் என ஐந்தாகப் பிரித்து பஞ்சபூதங்களை போற்றினான் இதனடிப்படையிலேயே எல்லைக்கு ஒரு சக்தியை மையமாக வைத்து ஊரை உருவாக்கினான். வழிபாடு என்பது பஞ்ச பூதங்களை போற்றும் இயற்கை வழிபாடாகும்.

நான்கு பக்கமும் சதுரமான வடிவம் கொண்ட இவ்வடிதத்தினை சதுக்கம் என்பார். எல்லையில் உள்ள கூம்பு வடிவ கல்லை பூதமாக கொள்வதால் இதனை சதுக்கபூதம் என்கின்றோம். சிலப்பதிகாரம் போன்ற காப்பியங்கள் சமூகத்தைப் பற்றி கூறுகின்றனர். பூதங்கள் முனி சடா முனி பூதநாதன் சபான்ற பெயர்களிலும் வழங்கப்படும். பூதங்கள் இருக்கும் ஊர்களில் மாரியம்மன் வீரமாத்தி கன்னிமார் போன்ற சிறுதெய்வங்கள் வழிபாடுகள் காணப்படுகின்றன.

**வலுப்பூரம்மன் கோயில்**

பூதசதுக்கம் இக்கோயிலின் தென்புறத்தில் மேடையில் கிழக்கு முகமாக அமைந்துள்ள பூத சதுக்கம் இருக்கும் இடத்தில் கூம்பு வடிவ கல் விநாயகர் அல்லது பிள்ளையார் என்று வழங்கப்படுகிறது. இவ்வழிபாடானது உருவம் இல்லாமல் அருவுருவமாக உள்ளது. கூம்பு வடிவில் ஒரு உருவ கல்லான வடக்கே விநாயகர் சன்னதி உள்ளது. விநாயகர் கோயிலின் முன்பு சதுக்கபூதம் ஆனது அமைந்துள்ளது மேற்கு வடக்கு கிழக்கு தெற்கு போன்ற நான்கு திசைகளிலும் உள்ள இவ்வூர் மக்கள் விநாயகர் என்று எண்ணி இக்கல்லினை வணங்குகின்றனர்.



**தூரன், வேலுசாமி, வயது 70, காளவேலம்பட்டி, திருப்பூர்.நேர்காணல் (20.03.2024)**

மேற்கு ஆலங்குயில், வடக்கு முக விநாயகர், கிழக்கு சிதம்பரனார், தெற்கு வெள்ளைப் பிள்ளையார் என்ற நான்கு மூலைகளும் சேர்ந்த சதுக்கபூதம் என்கின்றனர். இவ்வாறாக வலுப்பூர நாட்டு மக்கள் பூதசதுக்கத்தை எல்லையின் காவல் தெய்வமாக வழிபடுகின்றனர்.

**சுமைதாங்கி கல்**

சுமைதாங்கி கற்கள் இல்லாத கொங்குநாடு இல்லாத முந்தைய காலகட்டங்களில் வண்டிப் பாதைகள் ஒற்றையடிப் பாதைகளில் செல்லும் மனிதர்கள் சுமந்து செல்லும் சுமைகளை கீழே இறக்கி வைக்காமல் அதன் மேல் வைத்து இளைப்பாறி எடுத்துச் செல்வதற்கே சுமைதாங்கிக் கற்கள் நடப்பட்டன. சுமைதாங்கி கற்களை நடுபவர்கள் அதில் தங்களது பெயரினை பொரித்து வைப்பார்கள். ஒரு காலகட்டத்தில் கர்ப்பிணிப்பெண் இறந்தவர்கள் நினைவாக அமைக்கப்பட்டது என்றும் இவர்கள் செய்திகள் கூறுகின்றனர். வலுப்பூர் நாட்டில் மக்களால் நடப்பட்ட சுமைதாங்கி கல் ஒன்று உள்ளது. இது மிகவும் பிற்காலத்தில் நடப்பதாகும். இச்சுமை தாங்கி கல் குறித்தும், அதன் தற்போதைய நிலை குறித்தும் பொன்னுசாமி, வயது 47, பல்லடம், திருப்பூர் என்ற கள ஆய்வாளரின் கருத்திற்கேற்ப தகவல்கள் அறிய முடிகியது.

- கிழக்கே வலுபுரம்மன் கோயிலுக்கு செல்லும் சாலையும் சேவலை கவுண்டன் பாளையத்திலிருந்கு வரும் சாலையும் சேரும் இடத்தில் பெரிய ஆலமரத்தின் அடியில் பூத சதுக்கத்திற்க்கு அருகிலேயே ஒரு சமாதி உள்ளகு சமாதியின் அருகில் அடக்கம் செய்யப்பட்டவர் நினைவாக சுமைதாங்கிகள் நடப்பதாக கூறப்படுகிறகு. இதுபோன்ற சுமைதாங்கிகள் திருப்பூர் மாவட்டத்தில் ஒரு சில பகுதிகளில் வரலாற்றின் அடிப்படையில் இன்றும் காணமுடிகிறது.

**வழிபாடு**

இலக்கியங்கள் இலக்கணங்கள் கல்வெட்டுகள் செப்பேடுகள் தகவல் பொருட்களின் விலைகளும் நிற்கும் சில காயில்கள் போன்ற சான்றாதாரங்களை கொண்டு பண்டைய காலத்திலிருந்து இன்றுவரை தமிழர்களின் வாழ்க்கை முறைகளையும் வழிபாட்டு மரபுகளையும் அறியமுடிகிறகுது. ஓவியங்கள், சிற்பங்கள் ஆகியவை அன்றைய காலகட்டத்தில் வழிபாட்டின் கூறுகளை வெளிப்படுத்துவதாக அமந்திருந்து.

ஆவி வழிபாடு, இயற்கை வழிபாடு, சிறுதெய்வ வழிபாடு, பெருந்தெய்வ வழிபாடு போன்ற உருவ வழிபாடு என பலதரப்பட்ட வழிபாடுகள் உள்ளன. பெரும்பாலும் கிராமப்புற மக்கள் சிறுத்தெய்வ வழிபாட்டினையே பின்பற்றுகின்றனர். இவ்வாறாக வழிபாடுகள் மனித வாழ்வில் இன்றியமையாதான பிரிக்க இயலாத ஒன்றாக கருதப்படுகிறது.

**வலுப்பூரம்மன் செவிவழி செய்தி வரலாறு**

வலுப்பூரம்மன் வரலாறு செவிவழி செய்தியாக கூறியவர் கோவம்சம் பண்டாரம் பூசாரி திரு. வேலுசாமி அவர்கள் தற்சபோது கோயில் இருக்கும் பகுதியில் ஒரே ஒரு புற்று மட்டும் காணப்பட்டது. வானுக்கும் பூமிக்கும் சுழல்காற்று ஏற்பட்டு புற்று கண்ணுக்குள் காற்று இறங்குவதை வலுப்பூர் நாட்டு மக்களும் அருகிலிருந்த ஊராரும் வந்து கண்டனர்.

பசு மாடு மேய்ப்பவர்கள் அதில் ஒரு மாடு புற்றுக்கு பால் சொரிந்ததையும் இது பல நாள்கள் தொடர்ந்து நடைபெறுவதையும் கண்டறிந்தனர். பசுமாடு புற்றுக்கு பால் சொரிவது கண்ட ஊர்மக்கள் அவ்விடத்தை சுத்தம் செய் பார்க்கும் போது அங்கு சுயம்புவாக தோன்றிய சாமி இருந்தது அன்றுமுதல் அவ்விடத்தில் பச்சைப் பந்தல் போட்டு பூஜை செய்ய தொடங்கினர். (தூரன் ,வேலுசாமி, வயது 70 காளவேலம்பட்டி, திருப்பூர்)

வெள்ளி, திங்கள், செவ்வாய் கிழமைகளில் உள்ளூர் விநாயகர் கோயில் பூசாரிகள் மட்டும் பூஜை செய்து பால், பழம் வைத்து விட்டு சென்று விடுவார்கள் என்ற பல பெயர்களை சொல்லி வணங்கி நீரை எடுத்து வைத்து செல்வார்கள். இப்படியே ஒரு சில நாட்களுக்கு மக்கள் வழிபாடு செயய் வந்தனர் இதற்கு சரியான பெயர் எவும் கிடையாது என்ற நிலை நிலவியது கரிகால சோழன் வலிப்பு நோயினை தீர்த்த காரணத்தால் தெய்வத்தினை மன்னன் ஆணைப்படி வலுப்பூரம்மன் என்றே அழைத்தனர். வலிப்பு தீர்ப்பதால் இக்கோயிலுக்கு அருகிலேய பூசாரி குடிசை அமைத்து தங்கினார். சாமி தினமும் 3 நேரம் பூஜை செய்து விபூதி போட்டு வந்தார். மன்னனின் மகளுக்கு வலிப்பு நோய் நீக்கிய தெய்தியை கேட்டறிந்த மக்கள் தங்களது நோயினையும் இத்தெய்வம் நீக்கும் என எண்ணி வலிப்பு நோயால் பாதிக்க இக்கோவிலுக்கு வழிபட திரண்டனர்.

அம்மனின் அருளால் பூசாரியும் பூஜை செய்து விபூதி போட வரும் பக்தர்களுக்கு வலிப்பு நோய் குணமானது. பக்தர்கள் வழிபட்ட பின்பே ஊற்றுக் கண்ணாக இருந்த இடத்தை ஊர்மக்கள் உடையார் இனத்தவரை கூட்டிவந்கு பிரமண் எடுத்து காலால் மிதிக்காமல் இளநீர் விட்டு பிசைந்து பெண் உருவமாக செய்யச் சொன்னார்கள் அவ்வுருவம் செய்த 45ம் நாளுக்கு அபிசேகம் ஆராதனை செய்யப்பட்டு விபூதி, தீர்த்தம், பிரசாதம் என எல்லாம் மக்களுக்கு கொடுத்தனர்.

அம்மனுக்கு அபிசேகம் தெய்த பின்னரே நெல், கருப்பட்டி, தேங்காய், பழம், வெற்றிலை, பாக்கு, ஊதுபத்தி, சாம்பிராணி போட்டு தீர்த்தம் தெளித்து மாலை சந்தனம் இட்டு ஊரார் முன்பு பூஜை செய்து வழிபாடு செய்து மனதை குளிர்விக்க வேண்டி கொள்ளும்படி பூசாரி கனவில் அம்மன் தோன்றி நோய் தீர்க்கும் முறையை கூறியது. நோயினைத் தீர்க்க வலிப்பு நோயாளிகளுக்கு 48 முறை சூடு வைத்து விபூதியால் சுட்ட காயங்களுக்கு மருந்தாக இட்டால் வலிப்பு நோய் தீரும் என்பது மருத்துவம் சார்ந்த வழிபாடாகும். மன்னன் வந்த பின்பு மக்களும் இதை பக்தியோடு வழிபட தொடங்கிய பின்னரே ஊற்றுக்கண்ணாக இருந்த ஊர் அம்மன் திருத்தலத்தில் குடியேறியது.

**வலுப்பூரம்மன் வழிபாடு**

வலுப்பூரம்மன் தெய்வமானது சிறு தெய்வ வழிபாடாகும். கோழி, ஆடு போன்ற உயிரினங்களை பலியிடுவதற்காக பக்தர்கள் வேண்டுதல் கோயிலில் விடுகின்றனர். குழந்தைகள் தொடர்பான நோய்கள் போன்ற பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் தெய்வமாக வணங்குகின்றனர்.

**குழந்தை வரம் வேண்டி வழிபாடு**

கோயிலின் முற்றத்தில் ஆலமரம் ஒன்று தலவிருட்சமாக உள்ளது. அங்கு வண்ண நிற பொம்மைகளையும் மஞ்சள் நிறத்தையும் கட்டி பிள்ளை வரம் வேண்டி வழிபாடு செய்வார்கள் பிள்ளை வரம் பெற்று நிறைவேறியவுடன் கோயில் பொங்கல் வைத்து அம்மனுக்கு படையலிட்டு வழிபடுவது வழக்கமாகும்.

**திருவிழா காலங்களில் வழிபாடு**

திருவிழாவானது 10 நாட்கள் நடைபெறும் குண்டம் இறங்குதல் சூலாயுதம் சாத்துதல் ஆடு, கோழிகளை பலியிட்டு கிடா வெட்டுதல், நாக்கில் கற்பூரம் ஏற்றி வேண்டுதல், தோல் சார்ந்த வியாதிகள் நீங்க மிளகும் உப்பும் கலந்து அம்மன் சன்னதியினை மூன்று முறை வலம் வந்து அம்மன் பாதத்தில் போட்டு வண்டிக் கொள்வார்கள்.

குழந்தைகளுக்கு சொறி, சிரங்கு போன்ற தோல் வியாதிகள் ஏற்பட்டால் உப்பும் மிளகும் வாங்கி அம்மகுக்கு வழிபாடு செய்வதால் தோல் சம்பந்தப்பட்ட வியாதிகள் நீங்கும் என்பது பக்தர்களின் நம்பிக்கையாகும். வலுப்பூரம்மன் வழிபாடு மட்டுமின்றி கோயிலினுள் உள்ள பரிவார தெய்வங்களும், மக்களின் குறைகளைத் தீர்ப்பது மட்டுமின்றி இத்தலத்திற்கு பெரும் வலிமை வாய்ந்த சக்தியாக உள்ளதால் மக்கள் வலுப்பூரம்மன் மட்டுமின்றி பரிவார தெய்வங்களையும் வழிபாடு செய்கின்றனர்.

**பிற தெய்வங்கள்**

**விநாயகர்**

இக்கோயிலின் விநாயகர் சிலைக்கு அடுத்துள்ள முக்கியமான வழிபாடாகும். தமிழர்களின் வழிபாடுகளில் நாகர் வழிபாடு மிக முக்கியமான வழிபாடாகும் ராகு, கேது ஆகிய இரண்டு தெய்வத்தையும் இவ்வூர் நாக வழிபாட்டில் வைத்து வழிபடுகின்றனர். குழந்தை வரம் கிடைக்க இரு நாகங்கள் பிணைந்து இருப்பது போன்ற சிலையை வடித்து வலுப்பூரம்மன் கோயிலில் வைத்து வழிபட்டால் குழந்தை வரம் கிடைக்கும் என்பது ஊராரின் நம்பிக்மகயாகும். தோஷம் நீங்குவதற்கும் கல் உருவில் செய்த நாகத்தை வழிபடுகின்றனர்.

**கருப்பராயன் வழிபாடு**

கருப்பராயன், கருப்பண்ணன், கருப்புசாமி பதினெட்டாம்படி கருப்புசாமி, வாகு கருப்பண்ணன், கருப்பண்ணசாமி இவ்வாறாக பல பெயர்களில் வழங்கப் பெறுகிறது. கருப்புராயன் வழிபாடானது சிறு தெய்வ வழிபாட்டுக்கு உரியதாக கிராமப்புறங்களிலும் தெய்வமாக வழங்கப்படுகிறகு. இது போன்றே வலுப்பூரம்மன் கோவில் இருக்கும் கருப்பராயன் காவல் தெய்வமாக கருதப்படுகிறகு.

**குதிரை வழிபாடு**

கருப்பராயன் கோவிலுக்கு வடபுறம் கிழக்கு நோக்கி உள்ள இம்மண் குதிரை ஊரார்கள் உபயமாக கொடுக்கப்பட்டதாகவும் கருப்பராயன் கோவில் மண்ணால் சுடப்பட்ட காவல் தெய்வமாக காட்சி தருகின்றனர். மக்களும் அதனை கருப்புராயனின் வாகனம் என கருதி மண்ணால் வடிவமைத்து செய்து வழிபடுகின்றனர்.

காவல் தெய்வமான கருப்பராயன் இந்த குதிரையின் மீது அமர்ந்து அம்மனையும் ஊர் மக்களையும் காப்பதாகவும் கருப்பராயன் இந்த குதிரையோடு வேட்டைக்கு செல்வார் என்ற நம்பிக்கை மக்களிடையே நிலவுகிறது.

**தூரிக்கல்லின் வழிபாடும் நோக்கமும்**

பொருள், பணம் போன்றவற்றில் கொடுக்கல்- வாங்கல் உள்ளவர்கள் இடத்தில் கருத்து வேறுபாடு ஏற்பட்டால் பலகையின் மேல் வைத்கு பஞ்சாயத்து செய்கு ஊரார் முன்னிலையில் எடுத்துக் கொள்வகு வழக்கமாகும். குழந்த பாக்கியம் இல்லாதவர்கள் வேண்டுதல் பொருட்டு கடவுள் அருளால் குழந்தை உண்டான பிறகு கோவிலுக்குள் பொங்கல் இட்டு குழந்தையைத் பலகையில் வைத்து மூன்று முறை ஆட்டுவித்து இறைவன் தொடர்பான பெயரை சூட்டி அம்மன் வழிபடுவர்.

**தீர்த்தத்தின் மகிமை**

பூஜைக்கு வைக்கப்பட்ட அம்மன் தீர்த்தத்தை எடுத்து வாதம் வலிப்பு மன நோயாளிகளுக்கு பில்லி, சூனியம், ஏவல் உள்ளவர்களுக்கும் உடலிலும் முகத்திலும் மூன்று முறை தெளித்தால் நோய் நீக்கப்படுகிறது என்பது நம்பிக்கையாகும் காட்டுகின்றனர். ஆடிமாதம் ஏராளமான சடங்குகள் போன்றவை நடைபெறுகின்றன. கெடா வெட்டும் போது பொங்கல் வைத்து பூஜைகள் செய்து கொடுக்கப்படுகிறது. எந்திரம் கட்டுதல் முன்னோர்கள் காலத்திலிருந்கு எந்திரம் கட்டும் முறை வழக்கத்தில் இருந்து வருகிறது. அம்மனுக்கு உகந்த மந்திரங்களை ஒரு தாமிர தகட்டில் எழுதி நூல் கொண்டு சுருட்டி கட்டி அதனை மஞ்சள் நீரில் தோய்த்து அம்மன் பூஜையில் வைத்து விடுவார்கள்.

பில்லி, காத்து கருப்பு, வலிப்பு போன்ற நோய் உள்ளவர்கள் அம்மனை வணங்கி பூசாரியிடம் காணிக்கை கொடுத்து பூஜை செய்யப்பட்ட எந்திரத்தை கையில் கட்டிக் கொள்கின்றனர் எந்திரம் கட்டுவதால் நோய் தீரும் என்று இவ்வூரார் தெய்வத்தின் மீது நம்பிக்கை வைத்து வழிபடுகின்றனர்.

**தொகுப்புரை**

வலுப்பூர் நாட்டிலுள்ள வலுப்பூரம்மன் வழிபாடானது நோய் தீர்க்கும் மருத்துவம் சார்ந்த வழிபாடாகும் இத்திருத்தலத்தின் வரலாறு வழிபாட்டுக் கூறுகள் தெய்வத்தின் சிறப்புகள் மக்களின் வழக்கங்கள் மற்றும் நம்பிக்கைகளை கள ஆய்வின் மூலம் அறிய முடிந்தது.

**துணை செய்தவை**

**புத்தகங்கள்**


1. இராமநாதன், முனைவர் ஆறு., தமிழர் வழிபாட்டு மரபுகள். மெய்யப்பன் பதிப்பகம், 53, புதுத்தெரு, சிதம்பரம், 608001,2006.
2. சந்திரசேகரன், முனைவர் இரா., நாட்டுப்புற வழிபாட்டு மரபுகளும் நம்பிக்கைகளும், தமிழியல் மன்ற தலைவர், பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் - 641 046, 2003.


**நேர்காணல்**

**தகவலாளர்**

1. தூரன் , வேலுசாமி, வயது 70 காளவேலம்பட்டி, திருப்பூர் - 641603.
2. பொன்னுசாமி, வயது - 47, பல்லடம், திருப்பூர் - 641603.